

# புதிய படைப்பு!

ஐம் 4



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# புதிய படைப்பு!

இதழ் 4

வெளியீடு :
அன்பின் குடில்,
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
தொலைபேசி : (04256) 227655
மின் அஞ்சல் : anbinkudil@yahoo.co.in

முதற்பதிப்பு : புதிய படைப்பு இதழ் 4
குரு பூர்ணிமா 2013

பிரதிகள் : 350

அட்டைப்படம் : முக்திநாத் கோயில்

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025

# பொருளடக்கம்


1. நீ உன்னை ஓர் அஃறிணைப் பொருளாக பாவனைப் பண்ணு ........ 111

2. ஓர் ஸ்ரீ மஹாத்மாவின் கேள்வி:
ஹரி துயில் வேறு? அறிவின் துயில் வேறா?
அறிவின் விழிப்பு நிலை வேறு அறிவின்
உறக்க நிலை வேறா?
அறியாமையின் உறக்க நிலை என்றால் என்ன? ........ 120

3. ஸம்ஸார ஸாஹரத்திலிருந்து காப்பாற்றுகிறான ஸ்ரீபகவான் என்றால் என்ன? ........ 145

4. ஸ்வய ஞானானுபவ நூலில் 73 முதல் 77 வரை உள்ள பாடல்களுக்கு விளக்கம் ........ 149

5. பிரம்மம் ஸத்தியம் ஜகத் மித்தை ........ 176

6. ஸ்ரீசகஜானந்தாவின் கேள்வி ........ 179

7. ஸ்வய ஞானானுபவ நூலில் 44வது பாடலுக்கு விளக்கம் ........ 195

8. ஸ்வய ஞானானுபவ நூலில் 95 & 98 ஆகிய பாடல்களுக்கு விளக்கம் ........ 203

9. ஓர் முக்கிய கருத்து ........ 213

10. அதுவே நாம் என உறுதி செய் ........ 215

11. சர்வார்ப்பணம் உறுதியானால் பாதகமான செயல் செய்ய முடியுமா? ........ 216

12. முடிவுரை ........ 228


எல்லாம் நீ!



உள்ளிருப்பான்
ஸித் சொரூபமும்
இயக்க மற்றதே.
இயக்கம் தோற்றமது
மனதால் மட்டுமே. மனமே
இயங்குவதையே உலகம் இயங்குகிறது எனச்
சொல்கிறோம்.

தாவாத்தீத **பரத்தை** தோற்றம்:
இயக்கம்: இவ்வாமை யாவும்!
**யாம் யாமாகவே** இருக்கிறோம்
என்ற, ஓர் இருப்புத் தன்மையை **மட்டும்**
உடையதாக இருப்பதாலும், **அதை**
**அது இது** என்று ஸ்மரணைகளால்!
பேசிப்பட்டு உணர்ந்தப்படுவதால்.
முமுட்சுக்கள் சாதகியாளர்கள் எல்லாம்!



மனமே நாசமானால் (112)
இயக்கமே நாசமே.
இயக்கம் நாசமானால்
அனைத்து நாம ரூபங்களும்
சர்வ நாசமே | எனும் நிலையை உணர்க.

வினையால் ஓர் பாவம் தோன்றி வந்த நம்மை | யுக்
ஓர் அ ஹரிணப்பெருங் [uncertain] |
மெய் பாவனை செய்தால் அதுஇது [uncertain] |
எனபாவனை செய்தால் பாவனை நீத்த
நிலையாகிய பரப்பிரம்ம |
நிலையை அதி | சீக்கிரமாக பெற முடியும் என்பது
ஆதி ஸ்ரீ மஹாராண் அனுபவவாக்காக இருக்கிறது
என்று உணர்த்தப்படுகிறது.

×—×—×—×—×



ஜகஜீவ தோற்ற, நாம ரூபங்கள்! (113) இல்லையானால்; தோற்றமும், தோற்றத்தால் இருப்பும், இருப்பால் இயக்கமும், இல்லாத (பிரம்மம்) ஜடம்தானே உண்டு - கவனி

ஸத் சொரூபமான ஸ்ரீபகவானும்!

இயங்கவில்லை. பூரணம்க்குள்ளிருக்கும்

ஸத் சொரூபமான நீயும் இயங்கவில்லை.

ஸத் பரத்தின் நிழலான மாயாவும்

மாயாவின் குழந்தையான மனமும் தான்

மனதின் வினை விதியினை வைத்து, இயங்குகிறது. அவ்வியக்கமே நாம ரூப ஜகஜீவ, தோற்றமும், இருப்பும், இயக்கமும், ஆகும் என உணர்.



ஸ்ரீநைய காவநு
கனிவெவ்வாம் ! 14
அருளி இது ! என
அஞ்ஞானிமைப் பொருள்
என பேசியே;

கவனம் தேவை.

(A) அறிவின் / நிலையால் ஈசனின் / இருப்பும், இயக்கமும் தோற்றுகிறது.

(B) மாயை / நிலையால் ஓர் ஜீவனின் / தோற்றமும், இருப்பும், இயக்கமும் / தோற்றுகிறது.

மாயை நிலை அனேக குணம் உடையதாகும்.
அறிவின் நிலை ஏககுணம் " .
ஆகவே இவ்விரண்டையும் மனம் / என்றே
ஆதி ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

நீ உன்னை ஓர் அஃறிணைப் பொருளாக பாவனைப் பண்ணு





மனம்! இல்லாமல் அறிவு! 16 மய மாத

இருந்தால் அது இயல்பாகவே அமைந்திருந்தது.

சூட்சுமம்! (தோற்றமற்ற) இருப்பும்! இயக்கமும் உடைய, அறிவு நீ ஜோதி.

(காணமுடியவில்லை) ஆனால், இருப்பும் இயக்கமும்!

பரிமாறினால் பேசப்படுகிறது. எழுதப் படுகிறது. அதாவது வாயு! (காற்று)

எப்படி கண்களுக்குப் படாமல்,

ஆனால் இருப்பும் இயக்கமும் தோற்றப் படுகிற நேரம், அவ்வாறே என உணர்க.

## நீ உன்னை ஓர் அஃறிணைப் பொருளாக பாவனைப் பண்ணு



இங்கு சைதன்யம் 117
என்பது:-
மனிதஇனம் உட்பட
84 லக்ஷம் ஜீவ
கோடிகளிலும் உள்
இருப்பின் ஆன்மா என்று
உணர்க.

காலாதீத பரமம் / சைதன்யமும்
ஆன்மாவும் அகண்டம்

என்றும், கண்டமென்றும், அளவிடுதான்
பெரியது / சிறியது / என்ற பேதமேதுமிற.
இருப்பில் இல்லையென்பதே ஐக்கியம்.
ஆகவே சைதன்யத்தையும் / பரத்தையும் /
அது, இது, என்றுதான் பேசப்படுகிறதேயன்றி,
நான் / நீ / என்றோ, அவன் / அவள் / அவர் என்றோ,
பேசப்படுவதல்ல. ஐக்கியம்.



நான் / நீ / அவர் /
அவன் / அவள் / பு18
என்ற வார்த்தையெல்
லாம் / உபசாரவசன
வாக்கின் மாயா ஜாலமே என அறிக.

நான் / நீ / என்பதும் ; அவர் அவன் /
அவள் / என்பதும் ; மறை /
விகார, விவகாரமே யன்றி
வேறொருபுண்ணைக்கும் இல்லையென்பதே ஸத்தியம்.

அவர் / அவன் / அவள் /
நான் / நீ / என்பதெல்லாம் வார்த்
தையின் மாயாஜாலமும், உபசாரமுமேயாம்.

## நீ உன்னை ஓர் அஃறிணைப் பொருளாக பாவனைப் பண்ணு



நான்! நீ! அவன்!
அவள்! அவர்! 19
என்ற ஐம் குறிகள்
எல்லாம் கவிதோஷத்தால்
வந்தவைகள் என உணர்வால் உணர்க.

முழுதும் கெட்டு; மீத்தறுபட்ட;
மீதிக்கு அவசரத்திற்கு முக்காடு
திரைமறைப்பு ஏதுக்கடி ???? என் மது போல்
இல்லாத உலகம் எங்கே கெட்டாவென்ன?
இருந்தென்ன?? போயென்ன???
அதுஇது/ என உன்னை ஓர்
அஃறிணைப் பொருளாக்குவாயாக.
இருப்பது ஒன்றே.
நடப்பது நலமே.

ரு வெ பாபா





ஓர் ஸ்ரீமஹாத்மா வந்தார்.

அவர் கேள்வி & பதில்.

ஸ்ரீமஹாத்மா:— பிரணைமாம் ஜீ! தாங்களுடைய
ஸத்ஸங்கங்களில் பல இடங்களில்
பலமுறை! கேட்டதுண்டு. ஆனால் கேள்வி
ஏதுவும் இதுவரை கேட்டதில்லை. மேலும்
தாங்களுடைய ஸ்வய ஞானபல
நாவில் ஓர் பாடலில் தூங்காமல் தூங்கும்
வரை! எனை வருகிறது. அதைவைத்து
மூன்று கேள்விகள் எனக்கு எழுகின்றன.
அதுபற்றி கேட்டுப் போகவே வந்தோம்.

வைத்தியம்:— தாராளமாக கேளுங்கள்
மஹாத்மா? சந்தேகத்தில் தெளிவு
பிறந்தால்தான்;



(21)

ஸ்வய அனுபவம்! கடவுள்

மஹாத்மா. (1)

ஸ்ரீ மஹாத்மா:- ஹரி துயில்! வேறு,

அறிவின் துயில் வேறு?

(2) அறிவின் விழிப்பு! நிலை வேறு

" உறக்க! நிலை?

(3) அறியாமையின் உண்டா

உறக்கம்! என்றால் என்ன?

இம் மூன்று கேள்விகளும்தான் எனது கேள்வி ஆகும் ஜீ! இதற்கு மட்டும் விடை தாருங்கள். பின்னர் பார்ப்போம்.



122

வைத்தியம் :— தாங்களும் ஸ்வய ஞானுபவ நூல்! பாராயணம் செய்கிறீர்களா மஹாத்மா?

ஸ்ரீமஹாத்மா :— என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? இந்த ஹிமாலயாவில் பனிமலை சிகரங்களில்! ஸ்வய ஞானுபவ நூல்! பாராயணம் செய்யாத (ஸ்ரீமஹான்களே) குகைகள் இல்லையென்றே சொல்லலாம்.

இங்குள்ள ஸ்ரீமஹாத்மாக்கள் ஒவ்வொருவர் திருக்கரங்களிலும் அ..ந்..நூ..ல்! குழந்தையென தவழ்ந்து விளையாடுகிறதே! அவற்றின் விளக்கவுரைகளாக பலப்பல!



123

எழுதப்பட்டிருக்கும் படங்களே! இங்கு

பக்தசங்க அறுபட

நூலாக இருக்கிறது ஜீ!

வைத்தியம் :- நாராயணா! நாராயணா!!

என்றவுடன் இடைமறித்தார்!

ஸ்ரீமஹாத்மா :- யாரை அழைக்கிறீர்கள்

பிரபு ஜீ!??

வைத்தியம் :- நம்! அப்பனைத்தான்

ஸ்ரீமஹாத்மா :- நம் அப்பன் நாராயணனையா?

வைத்தியம் :- வேறு எவரைக் கூப்பிட?

இருப்பவர் ஒருவரே! இருப்பதும் ஒன்றே!





அசையும்நிலையில் ஒருவர். அசையாநிலையில் ஒன்றே! மனோரத்மா.

யே.

ஸ்ரீமனோரத்மா :- அந்த ஒருவர் அங்கில்லை பிரபுஜீ! இங்கேதானே இருக்கிறார்.

அந்த ஒருவரைத்தான் நேருக்கு நேர் **கண்டு!** தரிசிக்கிறோம். அசையா அவர் **இருப்பை!** எம்முள்ளேயே உணர்கிறோமே பிரபுஜீ.

வைத்தியம் :- அதை ஏன் இங்கு இப்படி புலம்புகிறீர்கள்??? தாங்கள் அந்த விஷயம் 3 கேள்விகள், அதன் விடையை மட்டும் கவனமாக கேளுங்கள்.





ஸ்ரீமஹாத்மா :- தாங்களின் இந்த

# பிரம்ம ரகஸ்யத்தை! மற்றும்

எவரையும் வாயை திறக்க அனுமதிப்ப
தில்லையே ஏன் பிரபு ஜீ!

வைத்தியம் :- ரகஸ்யம் என்றால் அதன்
பொருளென்ன மஹாத்மா? உம்

ஸ்ரீமஹாத்மா :- **அறிவு** உடையவர்களை
இதைச் சொன்னால் **அனுபவ** அறிவு!
பெருகும் ஐயனே. அறிவில்லா புத்திசாலிகளிடம்!
கூறினால் தான் (அவர்களிடம்) மனம் இருப்பதால்
**கற்பனை!** நிலையில் கதை அளப்பதாக
தோற்றும் பிரபுஜீ!

இருப்பினும் எம்மை மன்னியுங்கள் எனச்சொல்லி,
ஸ்ரீபாதநமஸ்காரம் செய்தார்.



126

தினமும் 5 To 7
வரை அந்த
பரகருணையால்
பர ஒலி ஒலிப்பதால்
(அதுவே பர கருணை நிதியீ
யோகமாயாவிறல் இயங்குவதால்;)

வைத்தியம் :- ஆமாம் மஹாரத்மா! உங்களிடம் ஒன்றை கேட்கிறேன் ஸிவய ஞானநுபவ நூல்! தினசரி பாராயணம் செய்வது காலையா? மாலையா? இரவா? அல்லது மற்றைய எல்லா காலங்களிலுமா?

ஸ்ரீ மஹாரத்மா :- உங்களுக்கு எப்படி தோணுகிறது ஜீ???

வைத்தியம் :- பெரும்பாலும் அதிகாலை! எனத்தான் தோணுது.

ஸ்ரீ மஹாரத்மா :- சரியாகத்தான் சொன்னீர்கள். ஏனெ அதிகாலை! தானே

பிரம்மமுகூர்த்தம்?

அதுவே ஆன்மா! சாதனைக்கு உகந்த காலமாயிற்றே. அந்த சமயந்தான்



ஸ்வய ஞானானுபவ (27)
நூல் அதிகாலத்
தில் மோக்ஷ சாதனை
யாளன் பாராயணம்
செய்வானாயின் அவன்
வேறு எந்த பிரயத்தனமும்
இன்றி ஜீவன் முக்தி பெறுவான் என்பது
ஸத்தியமே.

பாராயணம் செய்வோம். மேலும்?

**பரஒலியாக** (அசரீரி)

**5** வருஷங்களுக்கு முன்பு ஹிமாலயா
ஸ்ரீ மெய்யன்பர்கள் அனைவரும் கேட்கும்
நிலைக்கு, ஓர் ஒலி ஒலித்தது பிரபுஜீ!

அதுஎன்னவென்றால்???
பரஒலி:- **முமூக்ஷுக்களே!**
மோக்ஷ இச்சை உள்ளவர்களே

தூலாதீத **பரமே!** உங்களுக்காக ஓர்
தூலம் தாங்கி வந்திருக்கிறது என உணர்க.



இந்நூல் 24

தோஷ& வக்ர குண கலி தோஷத்தை நாசம் செய்வதற்காக வந்த பராகுருவின்

யோகமாயாவின் அளப்பரிய கருணையாகும்.

# அது! ஆதிசிவம்!

வாக்காக வந்த சிவ ரகஸ்யம்! ஸ்ரீ

# ஸ்ரீமத்புகீதையை! ஸ்வய நூறுபவு

என்ற

# ரஸாம்ஸமாக்கிம்!

அதிகாலை! 5 To 7! என அதுவே

# மெய்யன்பர்களுக்காக!

நித்திய பாராயணம் செய்து வருகிறது.



129

அம்மஹாத்மா
உரையாடும்போது
அவர் வந்து
மற்றும் பயன் பெற்றனர்.
தவந்து
இந்நாகஜீச்சி ஹிமாலயா
ஹண் குகைகளாயம், அன்பின்
குடிவிழும் உறட்டி ஹம்ஸ விஹார் ஆஸ்ரமத்
திலுமீ நடந்ததனை அறிக.

அதுசமயம்! மோக்ஷத்தினி

ஸாதகன்! ஏவனொருவன்

பாராயணம் செய்திருந்தே அவன்!

கரும் முயற்சி இன்றி ஜீவன்

முக்தனவான்! இதுபிரமாணம் உண்மை.

என ஒலித்து! கிருபை சாதித்தது. ஜீ!

அன்றிலிருந்து இன்றுவரை! 5 To 7 வரை

ஸ்வயஞானுபவ நூலினை பாராயணம் செய்து வருகிறேன்

எனத்தெரிவு செய்தார் அம் மஹாத்மா!



130

வைத்தியம் :— அப் வைத்தியம் அவர் திருவடியில்
நமஸ்காரம் செய்து பர கருணைய
எப்படி இந்த வாயால் அழும் புகழ்வது? ஐயனே!
அந்த ஒன்றுக்கு நாம்
எல்லோரும் நமஸ்காரம் செய்வோம் எனச்
சொன்னவுடன், அங்கிருப்போரும் மற்றும்
நாங்கள் இருவரும் சேர்ந்து ஸர்வத்ர !!!
நமஸ்காரம் செய்தோம்.

பின்னர் உரையாடல் தொடங்கியது.

ஸ்ரீமஹாத்மா :— ஓஸம் ஐயனே, இனி
எம் மூன்று கேள்விகளுக்கும் எளிய!
இனிய! முறையில் விளக்கி அருளுங்கள்
ஐயனே?



ஸ்ரீஹரி எனச் சொல்லும் ஸ்ரீமந் நாராயணனுடைய தொழில் நிலையில் சூழும்போது, ஜீவ ரக்ஷிப்பாகும் என உணர்க. ஜீவ ரக்ஷிப்பில் ஓய்வு ஒழிவு இல்லவே இல்லை. வேலைப்பளுவும் அதிகம். ஆனால் அவர் தான் அதைத் தாவி ஓடாமல் ஜொலிப்புடன் ஆற்றுகிறார்.

வைத்தியம் :- உங்கள் முதல் கேள்வி என்ன மஹாத்மா?

ஸ்ரீமஹாத்மா :- ஹரி துயில் வேறு. அறிவின் துயில் வேறு? என்பதே நீ?

வைத்தியம் :- இரண்டும் ஒன்றே! ஹரி என்பது ஓர் நிலையில் கர்த்தாவான ஸ்ரீமந் நாராயணனையும் குறிக்கும். மற்றோர் நிலையில், அறிவையும் குறிக்கும் ஐயனே. ஸ்ரீஹரியாகிய ஸ்ரீ பிரம்ம தேவன்! ஓர் நிலையில் பிரம்மம்! ஆகிறார். ஸ்ரீஹரியாகிய ஸ்ரீமந் நாராயணன் ஓர் நிலையில், பிரம்மத்தை அறியும் அறிவு! ஆகிறார். ஸ்ரீஹரன் ஆகிய நம் ஸ்ரீசிவபெருமான்! என்பவர் அறிவை அடையுமோர் தர்மம்! ஆகிறார் என ஸ்ரீமஹான்கள் சொல்வர். (ஸ்ரீமஹாத்மா இடைமறிக்கிறார்)

(ஹரன் = தர்மம்)




ஸ்ரீமஹாத்மா :- தாங்கள் கூறும் ஸ்ரீமஹான்கள்
யார்? யார்?? ஐயனே?
வைத்தியம் :- தாங்களும் / தாங்களைப் போன்
றவர்களும் அம்மஹாத்மாக்களாவர் ஐயனே.
ஸ்ரீமஹாத்மா :- அப்படியானால் தாங்கள்
யார் ஐயனே??
வைத்தியம் :- தாங்களைப் போன்றவர்களின்
**மகன்**! ஐயா! சிரித்துவிட்டார். அவ் வைத்தி
அவரும் பலமாக சிரித்தது.
யமும் அவருடன் சேர்ந்து பலமாக இருந்து
ஸ்ரீமஹாத்மா :- தாங்களிடம் **வரும்**
**பணிவான**! வார்த்தைகளில்
இங்கு எவராலும் வெல்ல முடியாது எனச் சொல்வர்.
அது சரியாகத்தான் இருக்கிறது. இனி விளக்கம்
பெறலாம்.



வைத்தியம் :— இப்படியாக பிரம்மத்தை அறியும் அறிவாகவும் அதன் தர்மமாகவும் தான் அம் மூவரும் இருப்பதால் **தன்னை** உண்மைபடி அறிந்துணர்ந்த ஸ்ரீமஹான்கள்! அம் மூவரையும் **ஸத்குரு** எனச் சொல்லக் கேள்விப்படுகிறேன் மஹாத்மா.

ஸ்ரீமஹாத்மா :— (கடகடகட கட வெனசிரித்த படியே) நல்ல விளக்கம். அறிவு பூர்வமான தெளிவு. மேலும் சொல்லுங்கள் கேட்போம். (என்றார் ஆர்வமுடன்.)





வைத்தியம் :- அறிவே ! ஆன்மாவாகும் !
ஆன்மாவே ! அறிவாகும் ! ஆகவே இங்கு
ஹ்ருதயில் எனக் கூறப்பட்டதும் ;
அறிவின் ! " " ?
ஒன்றே. மேலும் ஓர் ரகஸ்யம் என்னவென்றால்
இம் மூவருமே ! ஆழ்நிலைதியா
னத்தில் ! ஏந்து ! விடையும் ;
(ஹ்ருதயாவில்)
இருப்பவர்களாதலால் பிரவர்த்தியில்,
இம் மூவரும் கட்டுப்படுவதில்லை. கட்டுபட முடியாது ;
என உணர்க.



35

ஆதலில் சுத்தகதாசூரவ் என்ற

பிரவர்த்தியானது, இவர்கள் கைக்கருவிகளாகிய

முப்பெரும்மாயாவால் (தேவியரால்) அதரவது போக ,, நடை

பெறுகிறது என உணரவேண்டும். இம்

மூவரும் செயலற்றவர்களே.

ஆகவே ஹரிதுயில் என்பதே

அறிவின் ,, ஆழ்ந்ததை உணர்க.

அதுவேதான் இரண்டும் ஒன்றே என்றேன்.

தாங்களின் இரண்டாவது கேள்விஎன்ன மஹாத்மா?



# இருந்தும்! இறந்து நிலை 136

ஞான விழிப்பு நிலையாகும் என அறிக.

நாமரூப ஜக ஜீவ தோற்றங்களை உண்டு, துலைத்து புதியது அறிவின் உறக்க நிலையாகும்.

ஸ்ரீமஹாத்மா :— அறிவின் விழிப்பு நிலை வேறு? அறிவின் உறக்க நிலை உண்டா? **விழிப்பு!** **உறக்கம்!** என்பதின் பொருள் என்ன?

பைத்தியம் :— விழிப்பும் உறக்கமும் வேறு வேறு தான. **அறிவு!** விழித்திருக்கும் நிலையில் ஜகத்தின் **நாமரூபம்!** தோற்றது மறையும். இதை ஓர் ஞானியின்! **விழிப்பு!** என்றும் சொல்லலாம். அந்த ஞானியானவன்! அறிவு நிலையில்.



முன் கூறியது 137

மனம் | உடையவர்களுக்குமட்டும் இன்பதுன்பங்களைகொடுப்பது

மனமே | நினைவால் ஞானமும் ஆகும்.

அறிவு | நிலையால் உறுதிகமாகவும்.

சாட்சி | பாவனையில் இருப்பான்.

ஞானிக்கு இது ஜாக்ரதா | விழிப்பு நிலையாகும்.

உலகமும் ஜீவர்களும் வினைவிதி |

வசத்தால் அஞ்ஞானிகளுக்கு விகாரம் விவ

காரமாக தோற்றிஞலும், (விகார காட்சி ஆனும்)

விவகார பிரச்சனையாக தோற்றி யாகவும் |

கண் இருந்தும் குருடாய் | காது இருந்தும் செவிடாய் |

வாய் இருந்தும் ஊமையாய் | ஓர் பிணம் |

போல் கிடக்கமாட்டான். சஞ்சாரம் செய்வான்.



இதுவே அறிவின் விழிப்பு நிலையாகும்.

இனி **அறிவின்!** உறக்க நிலையாவது.

**அறிவு!** உறங்குவதில்லைதான்.

ஆனால் **உபசாரமாக!** அவ்வாறு பேசப்படுகிறது. அதன் காரணம்?

**பேரறிவு!** என்பது நிர்க்குண சொரூபமாகும்.

அது செயலற்றதாகும். பிரம்மானந்தமே! அதன் வடிவமாகும்.

இந்தப் பேரறிவோடு! அறிவு ஒன்றும்போது

**அறிவும்!** செயலற்றதாகிவிடும்.



அதாவது சர்வார்ப்பணத்தால் ஜீவ உபாதை நாசமாகிறது.

பிரம்மார்ப்பணத்தால் ஈச உபாதையும் நாசமாகிறது எனவுணர்க.

இந்த ஈச உபாதை நாசமாவதையே, அறிவின் உறக்கமென்று உபசாரமாகவே செப்புகிறது.

அந்நிலையுறும் போது; கோடானு கோடி கோள்களும்! சூர்ய சந்திராதிகளும்! அனைத்து அண்ட சராச்சரங்களும்!



கோடானு கோடி
சூர்யசந்திராதி
களும் அண்ட
சராசரங்களும்!
ஸ்தம்பித்து விடும் என்றால்

40

செயலிழந்துவிடும் மஹா பிரளயம்
என எண்ண வேண்டாம். இந்நிலை அடைந்து

செயல் இழந்து / ஸ்தம்பித்து விடும்.

பின் எந்த தோற்றமும் / தோற்றமேது?

ஒரே மண் / மயமாகிவிடும் என அறிக.

ஆனால் அகண்டப் பேரொளி /
பிரகாசிக்காது என உணர்க.

இது அறிவு உறங்கும் நிலையாகும்.

அந்தப் பேரறிவும் / அந்த ஒன்றில் /

கலந்து மயமானால் தான்; அகண்டப் பேரொளி /

ஸ்வயமாக / பிரகாசிக்கும் என உணர்க.
இங்கு பேரறிவும் உறங்கும்
நிலை பெற முடியும்.



ஓ ஞானி! (41)

ஒருவனுக்கு

மட்டும்! தீக்ஷை கூடும்

அனைத்தும் இயல்பாகவே விழிப்பு நிலை

வைத்தியம்:- அடுத்து மூன்றும் கேள்வி என்ன மஹாத்மா? என்றவுடன் அவர் எழுந்து அந்த வைத்தியத்தின் திருவடிகளில் நமஸ்கரித்து விட்டு சொன்னார்:- மிகமிக மிக மிக தெளிவான விளக்கம் பிரபுஜீ. இப்படி விளக்கம் எவரால் தர முடியும் பிரபுஜீ???

காலாதீத அந்த ஓம்ஸ் தான்! இவ்வாறு தர முடியும் எனச் சொல்லி அதை!

மீண்டும் மீண்டும்! மீண்டும் மீண்டும்! நமஸ்கரிப்போம் எனச் சொல்லி அனைவரும் நமஸ்கரித்தோம்.

(ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்தோம்)

மீண்டும் அவர் தொடர்ந்தார்:- அடுத்து எம் மூன்றாம் கேள்வியாவது:- அறியாமையின்! உறக்கம் என்ன என்பதாகும்???



ஆனந்தமாக நடையெழுதும்



இதை வாக்காலோ ,, வரியாலோ விளக்கித்தர இயலாதும் இது

# ஸ்வய அநுபவம்

ஆகும் என அறிக.

வைத்தியம்: **அறியாமை** / என்றுவே. கவனக்குறைவு / எனப்பொருள்படும். அதாவது ஒன்றைப் பலவாத கற்பனை செய்தவாகும். ,, ஒன்றில் நிலையாமையாகும். ,, ஒன்றை மற்றொன்றாகக் கற்பனையால் கண்டு, அதில் சந்தேகம்! அதனால் களங்கம்! அதனால் தயக்கம்! அதனால் பயம்! முதலியன உண்டாகுதவாகும்.

மேலே கண்ட நிலையில் தான் இன்றைய கலியுக மாந்தர் **உலகை!** காண்பதும்; உறவு! சுற்றம்! நட்புகளில்! **பாசத்தைப்!** பொழிவதும்.



காமகாஞ்சனங்களில்!
பெண் & பணத்தாசையால் வீழ்வதும்!
மண்ணாசையால்! உ ல கை!
பலபல! விதவித! நா ம ரூ ப ங் க ளா க
கண்டும்! பேசியும்! இ வ் வா த கை!
இருப்புடையதாக நம்பி! உழல்வதும்! சுழல்வதும்!
அறியாமையின் உறக்கமென்று ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
இவர்கள் ஜாக்ரதை! யில் விழிப்புநிலையில்
மதி! மயங்கி! சுழல்வதையும்! உழல்வதையும்!
அறியாமையின் உறக்கமென்று ஸ்ரீமஹான்கள் சொல்வர்.





எல்லோரிடமும் பாரபக்ஷ நோக்கமில்லாமல்;

அறிவு! உண்டு. நன்கே அறியும்

அறிவைப்பெறுபவர் அனைவரும்; தம் அறிவை!

மனத்திரையிட்டு / மூடி விட்டு

அம்மணக்கண்ணால்! (அம்மணத்திரையால்)

உலகைக் காண்பது அறியாமையான் உறக்கமாகும்.

அறிவு நிலையில் அசையும் வடிவில் காணும்போது,

ஒருவன் இயக்கமே. அது பொம்மலாட்டமே!

என உணர்ந்தால் அது அறிவின் விழிப்பு நிலையாகும்.

அசையா வடிவில்; எல்லாம் ஜடசொரூபமாக

காண்பதும்; அவற்றை மண்ணாக உணர்வதும்



14+5

**பேரறிவின்** விழிப்பு நிலையாகும் ?

மனத்திரை நீங்கிறது எனச் சொல்வது எது என்றால்

நான்! என்னுடைய! எனது! என்பதும், வேதமும் மனத்திரையாகும்

அம் மஹாத்மா ஸாந்தி ஆதி அந்தர்தியானமானார்.

அடுத்தொரு ஸத்ஸங்கத்தில்.

ஓர் ஸ்ரீ மஹாத்மாவின் கேள்வி:- அன்பான

பாபாஜி! பக்தி நிலையில் ஓர் பக்தனிடம்

ஸ்ரீ பகவான் கூறுவதாவது:- உன்னை ஸம்ஸார

ஸாகரத்திலிருந்து கரையேற்றி விடுகிறோம். என

கூறுவானையின், ஸம்ஸார ஸாகரம் தாண்டிய

நிலையெனக் கூறுவது! **பிரவாஹே**! ஆகிய

ஜீவன் முக்திதானே? ??





வைத்தியம் :- அது பிறவா நிலையாகிய ஜீவன் முக்தி **அல்ல!** என உணர்க.

ஸ்ரீமஹாத்மா :- பின் அது எந்த நிலை?

வைத்தியம் :- ஸம்ஸார ஸாஹரத்தி
விருந்து! **பேரானந்த!** ஸாஹரத்திற்கு மாற்றுகிறேன்!
என உணர்க.

ஸ்ரீமஹாத்மா :- அப்படியானால் ஸம்ஸார ஸாஹரம் என்றும், பேரானந்த ஸாஹரம் எனவும் இரண்டு உண்டா? விளக்கம் தேவை?

வைத்தியம் :- ஸம்ஸார ஸாஹரம் என்பது :- புண்ணியம் & பாபம்! என்றும், இன்ப துன்பம்

**ஸம்ஸார ஸாஹரத்திலிருந்து காப்பாற்றுகிறான்ஸ்ரீபகவான் என்றால் என்ன?**



147

இ ஆனந்த ஸாஹரம் என்பது பேரானந்த ஸாஹரமாகும். இது அவரவர் பகவந்நாம ரூப ஆனந்த ஸாஹரமாகும்.

ஸ்ரீபகவானுடைய மாயா ஸமுத்ரமாகும்.

என்று கூறும் இந்த ப்பட்ட ஆண் அலை & பெண் அலை நிறைய ஸர்வஸதா அலை அடித்து; அசைத்து அசைத்து ஜனனமரணம் என்னும் சுழலில் சிக்கவைப்பதாகும்.

பேரானந்தஸாகரம் ஸமுத்திரம் என்பது :- அலையற்ற நிஸ்தரங்க ஸமுத்திரம் ஆகும் என அறிக.

இது ஆனந்தஸாஹரம் ஆகும் என மஹிமைவான்கள் சொல்வர். இன்பதுன்பம் இங்கில்லை.



இது ஆழ்த்தாது! அசைக்காது!

இதில் நிற்கலாம்! அமரலாம்! படுக்கலாம்!

ஆனந்தமான மிதவையாகும்

இன்ப துன்பமில்லாத ஆனந்த ஒருமையாகும்.

உன் பக்திக்கும்! உன் தர்மத்திற்கும்!

எத்தனைக் காவ! அளவு உண்டோ? அத்தனைக் காலமும் இங்கு ஆனந்தமாக இருந்து விட்டுப் பின் விட்ட! இடத்திற்கு இப்பூவோகம் வந்தே ஆக வேண்டும்.

இதுவே உன்னை இந்த ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரையேற்றுகிறேன் என்ற வாக்கின் அர்த்தமாகும்.



மற்றோர் மஹாத்மாவின் கேள்வி:-

ஹே அன்பானபாபாஜி! ஸ்வயஞானனுபவ நூலில்! 73 to 77 (5) பாடல்களுக்கு பாடல் & பதவுரை & கருத்துரை! என விளக்கம் வேண்டும் பாபாஜி!

வைத்தியம்:- தாங்களும் ஸ்வயஞானனுபவ நூல் சுவைத்து ஆனந்தம் அடையவர்போலும்? கவனம் தேவை

## பாடல்: 73

சித்தமல்லால் பிரபஞ்சம் என்றுமில்லை.
சித்தம்தான் பிரபஞ்சம் எனவே தோற்றும்.
சித்தம் அல்லால் ஸம்ஸாரம் என்றுமில்லை.
சித்தம்தான் ஸம்ஸாரம் எனவே தோற்றும்.
சித்தமதை சோதிக்கின் ஸித்தே ஆகும்.
ஸித்தான சித்தமதே சிவமாய் நிற்கும்.
சித்தமிவ்வா ஸின்மயமாம் சிவம்நாம் என்றே;
சிந்தித்து சிந்தித்து சிவமே யாவாய்.



150

அசையாதது **ஸத்!** அசைக்கும் நிலையில் **ஸித்!** அசையும் நிலையில் **சித்தம்!** என உணர்க.

# பதவுரை.

(1) சித்தமல்லால் பிரபஞ்சம் என்றுமில்லை.
(2) சித்தம்தான் பிரபஞ்சம் எனவே தோற்றும்.
:- உன் சித்தமே (எண்ணமே) இந்த நாமரூப பிரபஞ்சமாக தோற்றுகிறது.

(3) சித்தமல்லால் ஸம்ஸாரம் என்றுமில்லை.
(4) சித்தம்தான் ஸம்ஸாரம் எனவே தோற்றும்.
:- உன் சித்தமே (எண்ணமே) சர்வ சகர அசைகின்ற ஸம்ஸார ஸாஹரமாக தோற்றுகிறது.

(5) சித்தமதை சோதித்தால் ஸித்தேயாகும்.
:- சித்தமாகிய எண்ணத்தை **அறிவு** ஊன்றி விசாரணை செய்தால் **ஸத்தாகிய ஸத்!** சொரூபம் என தெளிவாகும்.



ஸத் ஒன்றே (5)

நாவரதீத பரமாகிய
பிரம்மமாகும். மற்றும்
சின்மயம்! சித்பரம்!
சன்மயம்! சிதாகாசம்
ஸித்சொரூபம் என்றெல்லாம்
சிவ சொல்வது:- **பரமாத்மாவே.**

(6) ஸித்தான சித்தமதே சிவமாம் நிற்கும்.

:- எண்ணவடிவான **சித்தமே!**
**ஸித்தின் மறு** வடிவமாகும்.
ஸித்தானது **ஸத்தின் மறு**
வடிவமாகும். ஸத்தும் **சிவமும்**
ஒன்றே என உணர்க.

சித்தத்தின் மறுவடிவம் ஸித் அல்லவ என்றும்.
ஸித்தின் மறு வடிவம் ஸத் அல்லவென்றும் உணர்க.

ஆகவே சித்தமே ஸித்தாகி, ஸித்தே ஸத்தாகி,
ஸத்தின் அம்சமான சிவமாகி நிற்கும் என அறிக.

(7) சித்தமில்லா சின்மயமாய் சிவம் நாமென்றே,



கூடஸ்தன்! (152)

அறிவு! ஞானம்! இவை எல்லாம் ஆன்மாவை குறிக்கும். பிரமாத்மாவும்! ஆன்மாவும்! அளவில்தான் பெரியது சிறியது என்ற பேதமே தவிர.

:- சங்கல்ப விகல்பங்களுக்கு (குற்ற கற்பனைகளுக்கு) ஏதுவான சித்தம் இல்லாத **சின்மய**! சொரூபமான **சிவம்**! **நாம்**! (அதுவே நாம்! நாமே அது என்று) என்று சிந்தித்து சிந்தித்து சிவமே ஆவாய்.

:- சிவமே நாம்! நாமே சிவம்! என்று தைல தாரைபோல் சிந்தித்து சிந்தித்து சிவம் ஆவாய்.

## கருத்துரை

உன் சித்தமே இந்த நாமரூப ஜகமாக (பிரபஞ்சமாக) தோற்றுகிறது.
" " (எண்ணமே) சர்வசதா அசைகின்ற சம்சார ஸாகரமாக தோற்றுகிறது. அறிவு ஊன்றி விசாரணை செய்தால்: **ஸத்**! ஆகிய **ஸித்**! சொரூபமே; உன் **சித்தம்**! என்பது தெளிவாகும்.



இருப்பில் 153

எந்த வேதமும் இல்லை.

இருப்பில் ஒன்றே

பிரம்மம் அகண்டமாகும்.

பரமாத்மா ஜீவாத்மா கண்டமாகும்! எனஅறிக.

எண்ண வடிவமான சித்தமே!

ஸித்தின் மறு வடிவமாகும்.

ஸித்தானது ஸத்தின் மறு வடிவமாகும்.

ஸத்தும் சிவமும் ஒன்றே என உணர்க.
,, ,, தெளிக.

ஆகவே சித்தமே ஸித்தாகி; ஸித்தே ஸத்தாகி;

ஸத்தின் அம்சமான சிவமாகிநிற்கும்.

குற்றம் குறை உணர்ச்சிகளுக்கு ஏதுவான;

சித்தம் இல்லாத ஸின்மய சொரூபமான

சிவம் நாம் என்றும் நாம் சிவம் என்றும்

தைலதாரை போல் சிந்தித்து சிந்தித்து சிவம் ஆவாய்.




# பாடல் 74.

மனதையல்லால் ஜகமுதவோர் அணுவுமில்லை.
மனதுவே ஜகமுதவாய் தோற்றவாகும்.
சொனமனது ஸங்கல்ப வடிவேயாகும்.
சோதிக்கின் ஸங்கல்பம் ஸித்தாய் தீரும்.
மனதுடைய ஸங்கல்பம் ஸித்தாய் தீர்ந்தால்;
மனதுதான் ஸின்மயமாம் சிவமே ஆகும்.
ஜனனமில்லா ஸின்மயமாம் சிவம் நாம் என்றே;
சிந்தித்து சிந்தித்து சிவமேயாவாய்.

குற்ற குறைகளை நீக்கி ஸத்வ பாவனை செய்தால்

## பதவுரை.

மனம் ஸித்தாகும் பின் ஸித்தே ஸத்தாகும் ஸத்சிவம் ஆகும் என உணர்க.

(1) மனதை அல்லால் ஜகமுதவோர் அணுவுமில்லை.
(2) மனதுவே ஜகமுதவாய் தோற்றவாகும்.

:—ஸங்கல்ப விகல்பங்களுக்கு (குற்றம் குறை உணர்ச்சிகளுக்கு) ஏதுவான மனம் இல்லாமல் நாமரூப ஜகம் இல்லவே இல்லை.



சிதாகாசம் (155)

என ஆகாயம்

குறிப்பிடப்படுவதால்,

அது அகண்டமாகிறது.

கண்ட நிலையால் பரமாத்மா ஆகவும்

அகண்ட நிலையால் காலவசமீத பரம் (பிரம்மம்)

எனவும் ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

(கற்பனையே)

இந்த மன! எண்ணமே! நாம ரூப ஜக ஜீவ

தோற்ற உலகமாக தோற்றுகிறது.

(3) சொரூபமனது ஸங்கல்ப வடிவேயாகும்.

(4) சோதிக்கின் ஸங்கல்பம் ஸித்தாய்த்தீரும்.

: இம்மனவடிவம் ஏது என்றால்? ஸங்கல்பமே

மனம்! மனமே ஸங்கல்பமாகும் என உணர்ந்து.

இங்கு குற்றம் குறை கற்பனைகள் நாசம் செய்தால்

அதாவது உணர்ச்சியின்! ,,

அங்கு மனம்! இராது இதுஸத்தியம்.



இ ஸித்தே! (56)

சித்தத்தால் ஆபாசம் பட்டதால் அதாவது எண்ணத் தாலி மாசு பட்டதால் அது ஸிதாபாசன் என்ற ஜீவான்மா வாகவும் மாறியது ஏன அறிக.

மனம் இல்லாத இடம் **அறிவின்**

சுத்தான ஸித் சொரூபமாகும்.

(உணர்ச்சிகள் எமோஷன். டென்ஷன் ஆத்திர ஆவேச வேதனை படபடப்பாகும்.)

(5) மனதுடைய ஸங்கல்பம் ஸித்தாய் தீர்ந்தால்:

(6) மனதுதான் ஸின்மயமாம் சிவமே ஆகும்.

:— மனதின் எண்ணம் ஒர்மையானால்

ஸத்வம் ஆனால் **ஸித்** சொரூபம் தாமாகிடும்.

மனம் ஸின்மயமானால்; அருத்தநிலையாகிய

ஸத்தான **சிவம்** ஆகிவிடும். ஓம்.

(7) ஜனனமில்லா ஸின்மயமாம் சிவம் நாமென்

(8) சிந்தித்து சிந்தித்து சிவமேயாவாய்.



167

நாமரூப கற்பனை பண்ணுவது மனம். கற்பனையை உறுதிப்படுத்துவது புத்தி. உறுதிப்படும் எண்ணத்தை செயல்படுத்துவது சித்தம். அதை நானெனநினைப்பது அகங்காரம் என அறிக.

:- அங்கு ஜனன மரணமில்லா ஸத்தியம் சிவம் நாம் என்று தைலதாரை போல் சிந்தித்து சிந்தித்து சிவமாவாய்.

## கருத்துரை.

ஸங்கல்ப விகல்பங்களுக்கு (குற்றம் குறை உணர்ச்சிகளுக்கு) ஏதுவான மனம் இல்லாமல் நாமரூப ஜகஜீவ தோற்றம் இல்லவே இல்லை. இந்த மன எண்ணமே நாமரூப ஜகஜீவ தோற்ற உலகமாகத் தோன்றுகிறது. ஸங்கல்பமே மனம். மனமே ஸங்கல்பம். இங்கு குற்றம் குறை



ஸின்மய சிவம் (154)

என்பது ஓர் நிலையில் கர்த்தாவான சிவனையும் குறிக்கும். ஓர் நிலையில் அகர்த்தாவான நாவாதீத பரத்தையும் குறிக்கும் என உணர்க.

கற்பனையாகிய உணர்ச்சிகளை நாசம் செய்தால் அங்கு **மனம்** நாசமாகும் என உணர்க.

மனம் இல்லாத இடம் அறிவின் ஸத்தான ஸித் சொரூபமாகும்.

மனதின் எண்ணம் ஓர்மையானால் ஸத்வமானால் ஸின்மய சொரூபம் தாமாகி வரும் இதுவின்மயமாகும்.

மனம் **ஸின்**மயமானால் அருந்தநிலையாகிய **ஸத்தான சிவம்** தாமாகி வரும்.

அங்கு ஜனன மரணமில்லா **ஸத்தின் சிவம்** நாம் என்று தைவதாரணை போல் சிந்தித்து சிந்தித்து சிவமாவாய்.



பரசிவம் (159)
என்பது;
நாவாதீத பரத்தை
குறிக்கும் என்றும்;
பரம சிவம் என்பது
கற்பிதோவான சிவமெய்மானை குறிக்கும் என
வுமீ உணர்க.

# பாடல்: 75

சின்மயமாம் எம்மிடையே மனது உதித்து.
சின்மயமாம் எம்மிடையே மற்றும் இருந்து;
சின்மயமாம் எம்மிடையே அடங்கவாவே;
சின்மயமாம் எம்மையல்லால் மனதே இல்லை.
சின்மயமாம் எம்மையல்லால் மனதில் வாகுதால்;
சின்மயமாம் எம்மையல்லால் எனையும் இல்லை.
சின்மயமாம் நாம் என்றும் சிவமே என்று.
சிந்தித்து சிந்தித்து சிவமேயாவாய்.

# பதவுரை:

(1) சின்மயமாம் எம்மிடையே மனது உதித்து.

:- சின் / மயமாம் சிவமான் /
எம்மிடமே இந்த குற்ற கற்பனையான மனது
உதித்தது. மனதேயாம் / யாமே மனம்

(2) சின்மயமாம் எம்மிடையே மற்றும் இருந்து;



160

:— ஸின்மய சிவ சொரூபமான எம்மிடையே

நாமரூப | ஜக ஜீவ | தோற்ற
பொம்மை | விளையாடிக்கொண்டிருந்து;
(விளையாட்டை)

3 ஸின்மயமாம் எம்மிடையே அடங்கவாவே;

:— ஸின்மய சொரூப சிவ சொரூபமான எம்மிடையே
மேலே சொன்ன விளையாட்டை போதுமென நிறைவு கொண்டு;
எம்மிடமே மறைந்து விட்டதால்;

4 ஸின்மயமாம் எம்மையல்லால் மனதே இல்லை.

:— ஸின்மய சிவ சொரூபமான எம்மையல்லால் | இந்த மனம் | இல்லவே இல்லை.



6

தாவ்:

5 ஸின்மயமாம் எம்மையல்லால் மனதில்லாத

:- ஸின்மய சிவ சொரூபமான எம்மையல்லால்

இந்த ஞான உணர்ச்சி யான மனதில்லாததால்:

6 ஸின்மயமாம் எம்மையல்லால் எவையுமில்லை.

:- ஸின்மய சிவ சொரூபமான எம்மையல்லால்:

ஜகத்தோ! ஜீவனோ! ஈசனோ! கொம்பனோ!

வம்பனோ! எவரும்! எவனும்! எவளும்! இல்லவே இல்லை.

7 ஸின்மயமாம் நாம் என்றும் சிவமே என்று:

8 சிந்தித்து சிந்தித்து சிவமே யாவாய்.

:- ஸின்மய சிவ சொரூபமான நாம்! என்றென்றும்





# சிவமே நாம்! நாமே சிவம்! என

தைவதாரை போல் சிந்தித்து சிந்தித்து சிவமேயாவாய்.

## கருத்துரை.

சின்மயமாம் சிவமான எம்மிடமே இந்த
குற்றம் குறை கற்பனையான மனது உதிக்குது.
(அகவே மனமே யாம், யாமே மனம்) சின்மய சொரூபமான
சிவமாகிய எம்மிடமே, நாமரூப [ஜகஜீவ] தோற்ற
குற்றம் குறை உணர்ச்சியான **பதுமை** விளையாட்டு
விளையாடிக்கொண்டிருந்தது.
சின்மயமான சிவசொரூபமான எம்மிடமே
மேலே சொன்ன விளையாட்டை போதுமென நினைவு செய்து கொண்டு



எம்மிடமே மறைந்து விட்டதால்; ஸின்மய சிவசொரூபமான எம்மையல்லால் இந்த **மனம்!** இல்லவே இல்லை. ஸின்மய சிவ சொரூபமான எம்மையல்லால் இந்த **மனம்!** இல்லாததால்; ஸின்மய சிவ சொரூபமான எம்மையல்லா ஜகத்தோ! ஜீவனோ! ஈசனோ! கொம்பனோ! வம்பனோ! எவரும்! எவனும்! எவளும்! இல்லவே இல்லை. ஸின்மய சிவ சொரூபமான **நாம்!** என்றென்றும்; சிவமே நாம்! நாமே சிவம்! என தைலதாரையேபோல் சிந்தித்து சிந்தித்து சிவமேயாவாய்.

## பாடல் 76.

ஸின்மயமாம் எம்மையல்லால் ஸங்கல்பத்தின்;
செயலான ஜகத் தோற்றம் எதுவுமில்லை.
ஸின்மயமாம் எம்மையல்லால் ஸங்கல்பத்தின்;
செயலான ஜீவேசர் யாரும் இல்லை.



ஸின்மயமாம் எம்மையல்லால் ஸங்கல்பத்தின்;
செயலொன்றும் ஒருகாலும் இலவே இல்லை.
ஸின்மயமாம் நாமென்றும் சிவமே என்று;
சிந்தித்து சிந்தித்து சிவமேயாவாய்.

# பதவுரை.

1 ஸின்மயமாம் எம்மையல்லால் ஸங்கல்பத்தின்;
2 செயலான ஜகத் தோற்றம் எவையுமில்லை.

:- ஸின்மய சிவசொரூபமான எம்மை!
கற்பனையின் தோற்றமாக செயல்படும்!
நாமரூப/ ஜக ஜீவர்கள் எல்லாம்!
எம்மையல்லால் வேறு எவையுமில்லை.

3 ஸின்மயமாம் எம்மையல்லால் ஸங்கல்பத்தின்;
4 செயலான ஜீவேஸ்வரர் யாரும் இல்லை.

:- ஸின்மய சிவ சொரூபமேயான எம்அஸ்லீள!



பாவனையின் | தோற்றமாக செயல்படும் | திரிகர்த்தாக்களும் | அவர்களின் மாயா | விளையாட்டும் எம்மையல்லால் வேறு இல்லவே இல்லை.

(5) ஸின்மயமாம் எம்மையல்லால் ஸங்கல்பத்தின்;
(6) செயலொன்றும் ஒருதாலும் இல்லவே இல்லை.

:- ஸின்மய சிவ சொரூபமான எம்பேரறிவின் | யோக&லோக | மாயாவின் செயல்களான அனைத்தும் எம்முடைய விளையாட்டே. எமக்கு அயலாக எதையும் இல்லை.

(7) ஸின்மயமாம் நாம் என்றும் சிவமே என்று;
(8) சிந்தித்த சிந்தித்த சிவமே யாவாய்.



166

:—ஸின்மய சிவசொரூபமான **நாம்** என்றும்
**நம்!** சிவமே என்று தைவதாரைபோல் சிந்தித்து
சிந்தித்து சிவமேயாவாம்.

# கருத்துரை.

ஸின்மய சிவசொரூபமான **எம்மை!**
கற்பனையின் தோற்றமாக செயல்படும்!
நாமரூப! ஜகஜீவர்கள்! எல்லாம் எம்மையல்லால்
வேறு எவையும் இல்லை. ஸின்மய சிவ சொரூபமான
எம் அறிவின் பாவனையின் தோற்றமாக
செயல்படும் **திரி!** கர்த்தாக்களும்!



அவர்களின் மாயா / விளையாட்டும்

எம்மையல்லால் வேறு இலவே இல்லை.

சின்மய சிவசொரூபமான எம் பேரறிவின் /

யோக & போக / மாயாவின்

செயல் காரண அனைத்தும் /

எம்முடைய / விளையாட்டேயாகும்.

ஏகமயமாய் எவையும் இல்லை.

சின்மய / சிவ சொரூபமான /

நாம் / என்றும் நம் / சிவமேயென்று;

தைலதாரைபோல் சிந்தித்து சிந்தித்து சிவமே ஆவாய்.



# பாடல் 77.

சின்மயமாம் எம்மிடையே கனவில்கண்ட;
ஜகமுதவாய் எமக்கயவாய் இவாததேயாவி;
சின்மயமாம் எம்மிடையே நனவில் கண்ட;
ஜகமுதவாய் எமக்கயவாய் என்றும் இவை.
சின்மயமாம் நாம்தானே என்றும் ஒன்றாய்;
செறிந்தகில பூரணமாய் சிவமாய்நின்றோம்.
சின்மயமாய் நாம்நாமாய் நின்றோம் என்று;
சிந்தித்து சிந்தித்து சிவமே ஆவாய்.

# பதவுரை.

(1) சின்மயமாம் எம்மிடையே கனவில் கண்ட;
(2) ஜகமுதவாய் எமக்கயவாய் இவாததேயாவி;

:- சின்மய சிவசொரூபமான எம்முடைய

**கனவில்** | கண்ட நாம ரூப ஜக ஜீவ |
**தோற்றம்** | அசத்தும், எம்மின்றே தோன்று



எம்முன்னேயே மறைந்துவிடுவதால் எண்ணமயன்றி / நாம ரூப / ஜக ஜீவ / ஸ்வரூபங்கள் இவையே இவ்விடம்.

3) ஸின்மயமாம் எம்மிடையே நனவில் கண்டு, 4) ஜகமுதவாய் ஏமக்கயவாய் என்றும் இவ்விட.

அதே போல், ஸின்மயசிவ சொரூபமான எம்முடைய நனவில் / காணும் / நாம ரூப / ஜக ஜீவ / தோற்றம் அனைத்தும் எம் மன / எண்ணம் / சொல் / செயலால் / தோன்றுவதைப் போல் தோன்றி மாறி மறைந்து / விடுவதால் அவைகளும் ஏமக்கயவாக இவையே இவ்விடம்.





5 ஸின்மயமாம் நாமீநாமே என்றும் ஒன்றாய்;
6 செறிந்தகில பூரணமாய் சிவமாய்நின்றேம்.

:- ஸின்மய சிவ சொரூபமான **யாம்தான்**
செறிந்தகில :- நாமரூப ! ஜக ஜீவ ! ஈச ! ரென !
அண்ட, ரண்ட, பிண்ட, பிரம்மாண்டங்கள் ! ஆகிய
**எல்லாமாய்** ! எம் சிவசொருபமாகவே
இருக்கிறேம்.

7 ஸின்மயமாய் நாமீநாமாய் நின்றேமென்று;
8 சிந்தித்து சிந்தித்து சிவமேயாவாய்.

:- ஸின்மய சிவசொரூபமான யாம் ! அதுஎன்ற
நிலமாறி **யாம்யாமாகவே** !
இருக்கிறேம் ! ஒர்மை **பரிபூரணத்வம்** ! பெற்று
விட்டோமென்று தைலதாரை போல் சிந்தித்து
சிந்தித்து சிவமே யாவாய்.



171

# கருத்துரை.

சின்மய சிவ சொரூபமான எம்முடைய கனவில்
கண்ட நாமரூப ஜக ஜீவ தோற்றம் அனைத்தும்
எம்முள்ளே தோன்றி, எம்முள்ளேயே மறைந்து விடுவதால்
எம்மையன்றி நாமரூப ஜக ஜீவ ஸ்வரூபங்கள் இல்லை.
அதேபோல் எம் நனவில் காணும் நாமரூப ஜக ஜீவ
தோற்றம் அனைத்தும், எம் மன எண்ணம் சொல் செயலால்
தோன்றுவதைப் போல் தோன்றி மாறி மறைந்து விடுவதால்,
அவைகளும் எமக்கு அயலாய் இல்லை. சின்மய
சிவசொரூபமான யாம் தானே, நாமரூப ஜக ஜீவ
அண்ட, ரண்ட, பிண்ட, பிரம்மாண்டங்கள் ஆகிய எல்லாமாய்
சிவசொரூபமாகவே இருக்கிறோம். இங்கு யாம் அது
என்ற நிலைமாறி யாம் யாமாகவே இருக்கிறோம் என்ற ஓர்மையில்
பரிபூரணத்துவம் பெற்று விட்டோம் என்று தைவதாரை போல்
இக்கதை இத்தது அவமே யாவாய்.



172

மாற்றவோ! மறு
க்கவோ! விலக்
கவோ! விலகவோ
சேர்க்கவோ! கழிக்கவோ!
எவராலும் இயலாது
எனும் சத்தியம். ஆனால் சர்வாரம்பனாம்
இதன் உண்மை
மனிதவர்க்கத்தையும்! மற்றும் எவ்வா ஜீவ[illegible] வடிவம்
சொரூபங்களையும் புதுமைகளாக
வும்! பொம்மலாட்டமாகவும்!
கண்டு உணர! பழகிவிட்டால்
ஜீ...வ...ம...ய...க்...க...ம்!
நாசம் அடையும் என உணர்க. அடுத்து
திட்டமிட்டு! பாரபட்ச தோஷமில்வாழ்வு!
விகிதாச்சாரப்படி! தயார்செய்து
வெளியிடப்பட்ட, ஓர் திரைக்காட்சி எனவும்

ஸ்வய ஞானானுபவ நூலில் 73 முதல் 77 வரை உள்ள பாடல்களுக்கு விளக்கம்



திட உறுதியோடு (73)

செய்பவருக்கு மட்டும்

முன்பின் கர்மாவை மாற்றி

அமைக்கவும் / வழிவிடக்கச் செய்யவும் முடியும்.

இதை மாற்றவோ / மறுக்கவோ / விலக்கவோ /

விலகவோ / சேர்க்கவோ / கழிக்கவோ !!!

வைராயும் இயலாது /

என தலைவணங்கி பணிந்து / ஏற்றுக்கொண்டால்,

இவ்வுலகம் / உனக்கு தலைவணங்கும்.

பொறுப்புகள் உன்னை விட்டு அகலும் / மனமே /

பாரம் நாசமாகும். உலகம் ஆனந்தமயமாகும்.



எல்லாம் நவமே 174
தீமையும் இல்லை
தீயவர்களும் இல்லை
என்றும் நம் மனே எண்ணமே
நம்மை மயமுறுத்துகிறது என்றாலும் திடமுறுதியும்
இருந்தால்; உலகம் ஆனந்தமயமே எனலாகும்

இவ்வுலக மயக்கம் நாசமாகும்போது மன சிக்கல்கள்/ சொந்த, பந்த, பாசப் பற்றுக்கள் தோற்றமல் எம்முயற்சியும் இல்லாமல் தானே/ மறையும். மூர்கமான/ போட்டி பொறாமைகள்! சூரியனைக்கண்ட பனிபோல் தானே/ மறையும். சீரோமன, உபாதைகள்! நாசமானதன்மையால், அகம்பிரம்ம பாவனை! (நாமே அது/ அதுவே நாம்) சுயஅனுபவமாகும்.

[illegible]பாபா.





உ

ஐ பாடல்களுக்கும் விளக்கம் பெற்றபின்னர்;

